முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திரு. G. யுவராஜ், M.A., M.L.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.

2022–ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 06–ஆம் நாள், திங்கட்கிழமை

அசல் வழக்கு எண் 239/2019

(CNR No. TNSA-1300-0385-2019)

A. மதலையம்மாள் .. வாதி

எதிராக

1. திருமதி. பத்தலிஸ் மேரி
2. ராஜா
3. வெனிஷ்
4. ரமேஷ்
5. மேரி
6. மடோனா .. பிரதிவாதிகள்

கடந்த 27.11.2019 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அதே தினம் இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ள இவ்வழக்கின் மீதான விசாரணையானது கடந்த 26.04.2022 அன்று என் முன்னர் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. மோகன் அவர்கள் ஆஜராகியும், 1, 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. H. முனவர்கான் அவர்கள் ஆஜராகி பின்னிட்டு பதிலுரை எதுவும் தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டும், 2, 3, 5, 6 பிரதிவாதிகள் அழைப்பாணை பெற்றுக்கொண்டும் ஆஜராகாமல் தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டும், வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், வாதி தரப்பை கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

.. 2 ...

தீர்ப்புரை

தாவா சொத்தினை வாதி அமைதியான முறையில் அனுபவித்து வருவதற்கு பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எவ்வித இடைஞ்சல், தடங்கலும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் மற்றும் வழக்கு செலவுத் தொகை கோரியும் வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. **தாவாவின் சுருக்கம்** : தாவா சொத்தினை வாதி கடந்த 11.04.2005 அன்று அந்தோணி முத்து மனைவி நாயகம் என்பவரிடமிருந்து கிரயம் பெற்று அது முதல் அவரது சுவாதீன அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருகிறார். பிரதிவாதிகள் காலம் சென்ற சோப்பன் (எ) கிரிஸ்ட், மரியா ஜோசப் என்பவரது வாரிசுகள் ஆவார்கள். பிரதிவாதிகளும், வாதிகளும் ஒரே கிராமத்தில் வசித்து வருகின்றனர். தாவா சொத்திலிருந்து சற்று தூரத்தில் பிரதிவாதிகளின் நிலம் உள்ளது. தாவா சொத்துக்கான வருவாய்த்துறை ஆவணங்கள் அனைத்தும் வாதியின் பெயரில் உள்ளது. பிரதிவாதிகள் தாவா சொத்துக்கு 3–ம் நபர்கள். அவர்களுக்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையோ, பாத்தியமோ, அனுபவமோ இல்லை. இந்நிலையில், பிரதிவாதிகள் தாவா சொத்தை அபகரிக்க வேண்டி வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்ய முயற்சித்தார்கள். கடந்த 07.10.2016 அன்று 1–ம் பிரதிவாதியின் கணவரும் 2 முதல் 6 வரை பிரதிவாதிகளின் தகப்பனார் வாதிக்கு தாவா சொத்தைப் பொறுத்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார். அதற்கு வாதி கடந்த 13.10.2016 அன்று ஒரு பதில் அறிவிப்பும் அனுப்பியிருந்தார். அதன் பின்னிட்டும் கடந்த 29.10.2019 அன்று பிரதிவாதிகள் அவர்களது அடியாட்களுடன் ஒன்று கூடி தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தார்கள். அதை வாதி அக்கம் பக்கத்தினர் உதவியுடன் தடுத்துவிட்டு மேற்படி பரிகாரத்திற்காக வேண்டி வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

.. 3 ...

3. 1, 4 பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி பின்னர் பதிலுரை தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினர்களாகியுள்ளனர். 2, 3, 5, 6 பிரதிவாதிகள் அழைப்பாணை பெற்றுக்கொண்டும் ஆஜராகாமல் தோன்றா தரப்பினராகியுள்ளனர்.

4. இவ்வழக்கில் வாதி தரப்பில், வாதி திருமதி. மதலையம்மாள் அவர்கள் தனது வழக்குரையை சார்ந்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து, தன்னை வா.சா.1–ஆக விசாரித்துக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். வாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாக, திருமதி. இருதயமேரி என்பவர் வா.சா.2–ஆக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியமளித்துள்ளார். வாதி தரப்பில் வா.சா.1–ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் 6 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. ***இவ்வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,***

1. இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தாவா சொத்து வாதியின் சுவாதீன அனுபவத்தில் இருந்துள்ளதா என்பதும்,

2. வழக்கில் வாதி கோரியவாறு நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா என்பதுமே ஆகும்.

6. **<u>பிரச்சினை 1 மற்றும் 2–க்கான தீர்வு :</u>** கோனேரிப்பட்டி கிராம சர்வே எண் 80/4–ல் ஏக்கர் 0.23 செண்ட்டில், நான்கு எல்லைகளுக்குள் அமைந்துள்ள ஏக்கர் 11–1/2 செண்ட் சொத்து இவ்வழக்கு சொத்தாகும். இவ்வழக்கு சொத்தினை இவ்வழக்கின் வாதி கடந்த 11.04.2005 அன்று, அந்தோணிமுத்து மனைவி நாயகம் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளது மேற்படி கிரயப்பத்திரத்தின் சான்று நகலான வா.சா.ஆ.1–ன் மூலம் தெரியவருகின்றது. அதன் பின்னிட்டு தாவா சொத்துக்கான பட்டாவானது வாதியின் பெயரிலும்,

வாதியின் கிரயதாரரான நாயகம் மற்றும் ஆரோக்கியம் என்பவர்கள் பெயரிலும் கூட்டாக பட்டா வழங்கப்பட்டுள்ளது பட்டா எண் 753-க்கான கணினி பட்டாவான வா.சா.ஆ.2-ன் மூலம் தெரியவருகின்றது.

7. தாவா சொத்தினை வாதி அனுபவித்து வந்து கந்தாயம் செலுத்தி வருவது வா.சா.ஆ.5 மற்றும் 6 கந்தாய ரசீதுகள் மூலம் தெரியவருகின்றது. மேலும் தாவா சொத்தினை வாதி அனுபவித்து வருவதை நிரூபிக்கும் வகையில் வாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இருதயமேரி என்பவர் வா.சா.2-ஆக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியமளித்துள்ளார். வா.சா.2-ன் சாட்சியத்தின் மூலமாகவும் தாவா சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டு வாதியின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவது தெரியவருகின்றது.

8. பிரதிவாதிகள் இவ்வழக்கில் அழைப்பாணை பெற்றுக்கொண்டும், நீதிமன்றத்தில் ஆஜராகி தாவா சொத்தில் வாதிக்கு எந்தவித உரிமையும் இல்லையென்றோ அல்லது தங்களுக்கு தாவா சொத்தில் எந்தவிதமான உரிமை உள்ளது என்பதை குறித்தோ பதிலுரை எதுவும் தாக்கல் செய்து வழக்காட முன்வரவில்லை. எனவே வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகளின் மூலமாகவும், குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் 6 வரையான சான்றாவணங்கள் மூலமாகவும் இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டு, அவரது சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்துள்ளதை வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கில் வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் செலவுத் தொகையின்றி வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று முடிவு செய்து பிரச்சினை 1 மற்றும் 2-க்கு தீர்வு காணப்படுகின்றது.

9. இறுதியாக, நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு அனுமதிக்கப்படுகின்றது. முடிவில், வாதியோ, அவரது

ஆட்களோ, தாவா சொத்தினை அமைதியான முறையில் அனுபவித்து வருவதற்கு பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, யாரும் எந்தவித இடைஞ்சல், தடங்கலும் செய்யக் கூடாதென நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகின்றது. வழக்கின் தன்மையை கருதி செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2022–ஆம் ஆண்டு, ஜுன் திங்கள், 06–ஆம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G YUVARAJ
Digitally signed by G YUVARAJ
Date: 2022.06.06 13:12:51 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

ஆத்தூர்.

<u>பிற்சேர்க்கை :</u>

<u>வாதி தரப்பு சாட்சிகள் :</u>

வா.சா.1 திருமதி. மதலையம்மாள் (வாதி)

வா.சா.2 திருமதி. இருதயமேரி

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>

வா.சா.ஆ–1	11.04.2005 தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் சான்று நகல்
வா.சா.ஆ–2	12.06.2006 தேதியிட்ட பட்டா எண் 753–ன் கணினி பட்டா அசல்
வா.சா.ஆ–3	07.10.2016 அன்று ஜோசப் என்பவர் வாதிக்கும், இருதயமேரி மற்றும் செல்வம் என்பவர்களுக்கும் அனுப்பி வைத்த வழக்கறிஞர் அறிவிப்பு
வா.சா.ஆ–4	13.10.2016 அன்று வாதி தரப்பில் அனுப்பி வைத்த பதிலறிவிப்பு

.. 6 ...

வா.சா.ஆ–5	04.03.2015 தேதியிட்ட கந்தாய ரசீது அசல்
வா.சா.ஆ–6	20.01.2018 தேதியிட்ட கந்தாய ரசீது அசல்

பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

நீதிமன்ற சாட்சிகள் : இல்லை

நீதிமன்ற சான்றாவணங்கள் : இல்லை

G YUVARAJ

Digitally signed by G YUVARAJ
Date: 2022.06.06 13:13:01 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

ஆத்தூர்.

மு.மா.உ.நீ., ஆத்தூர்.

அ.வ. எண் 239/2019

அசல் / வரைவு தீர்ப்புரை

நாள் : 06.06.2022.

அசல் வழக்கு எண் 239/2019

நாள் : 06.06.2022 : தீர்ப்புரை பகரப்பட்டது. இறுதியாக, நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு அனுமதிக்கப்படுகின்றது. முடிவில், வாதி தாவா சொத்தினை அமைதியான முறையில் அனுபவித்து வருவதற்கு பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, யாரும் எந்தவித இடைஞ்சல், தடங்கலும் செய்யக் கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படு–கின்றது. வழக்கின் தன்மையை கருதி செலவுத் தொகை இல்லை.

G YUVARAJ

Digitally signed by G YUVARAJ
Date: 2022.06.06 13:13:08 +0530

மு.மா.உ.நீ.